நாள்

25

தேதி

HAPPY ENGLISH LEARNING PROGRAMME

## WINNING THOUGHTS

**H.E.L.P.**

**HEATED gold becomes an ornament -**
**BEATEN copper becomes a wire -**
**DEPLETED stone becomes statue.**
**So, the more pain you get in life, the more valuable you become.**

**புடம் போட்ட தங்கம், ஆபரணம் ஆகிறது.**
**உருக்கிய செப்பு, கம்பி ஆகிறது.**
**செதுக்கப்பட்ட கல், சிற்பம் ஆகிறது.**
**ஆகவே வாழ்க்கையில் நீ அடையும் துன்பமே உன்னை மிகுந்த மதிப்பு மிக்கவனாக்குகிறது.**

# UNDERSTAND YOUR PERSONALITY

## PERSONAL PROBLEM MANAGEMENT
## தனிப்பட்ட பிரச்சனைகளை நிர்வகித்தல்

| | Always<br>எப்பொழுதும் | Sometimes<br>எப்பொழுதாவது | Never<br>எப்பொழுதுமே இல்லை | Cannot say<br>சொல்ல இயலாது |
|---|---|---|---|---|
| 1. I manage my financial pressures systematically.<br>என்னுடையப் பொருளாதாரப் பிரச்சனைகளை திட்டமிட்ட முறையில் நிர்வகிக்கிறேன். | ☐ | ☐ | ☐ | ☐ |
| 2. I manage my life partner efficiently.<br>எனது வாழ்க்கைத் துணையை நான் சரியான முறையில் நிர்வகிக்கிறேன். | ☐ | ☐ | ☐ | ☐ |
| 3. I manage my time effectively.<br>எனது நேரத்தைச் சரியான முறையில் நான் நிர்வகிக்கிறேன். | ☐ | ☐ | ☐ | ☐ |
| 4. I deal with my responsibilities promptly.<br>எனது பொறுப்புகளைச் சரியான முறையில் விரைவாக நிர்வகிக்கிறேன். | ☐ | ☐ | ☐ | ☐ |
| 5. I maintain my relationships properly with my relatives and friends.<br>என்னுடைய நண்பர்களிடையேயும் உறவினர்களிடையேயும் எனது உறவுமுறையைச் சரியான முறையில் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறேன். | ☐ | ☐ | ☐ | ☐ |

# QUESTIONS AND POSSIBLE ANSWERS

**H.E.L.P.**

**What happened to you yesterday?**
நேற்று உனக்கு என்ன ஆயிற்று?

1. I had an headache, so I couldn't come.
   எனக்குத் தலைவலி இருந்தது, அதனால் என்னால் வர முடியவில்லை.
2. I thought I should meet you today only.
   இன்றைக்குதான் உங்களைப் பார்க்க வேண்டும் என்று நினைத்திருந்தேன்.
3. Wasn't yesterday a holiday ?
   நேற்று விடுமுறை அல்லவா?
4. I came and waited for you. I guess you must have come after that.
   நான் வந்து உங்களுக்காகக் காத்திருந்தேன். நான் போனதும் நீங்கள் வந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்.
5. I'm sorry. I couldn't make it.
   மன்னிக்கவும். என்னால் வர முடியவில்லை.
6. Sorry, I couldn't come. How did the programme go?
   மன்னிக்கவும், என்னால் வர முடியவில்லை. நிகழ்ச்சி எப்படி நடந்தது?

**Would you like to have a cup of coffee?**
ஒரு கப் காபி குடிக்க விரும்புகிறீர்களா?

1. Yes, I can have one.
   ஆமாம், கொடு, நான் எடுத்துக் கொள்கிறேன்.
2. Do you have tea?
   உங்களிடம் டீ இருக்கிறதா?
3. Yes, with medium sugar.
   ஆமாம், அளவான சர்க்கரையுடன் கொடு.
4. Can I have black coffee?
   எனக்கு பால் கலக்காத காபி (வரக்காபி) கிடைக்குமா?
5. No, just get me a glass of water.
   வேண்டாம், ஒரு கிளாஸ் தண்ணீர் மட்டும் கொடு.
6. No, I don't drink coffee...
   இல்லை, நான் காப்பி குடிக்க மாட்டேன்...
7. I drink milk only....
   நான் பால் மட்டும் தான் குடிப்பேன்...

**Are you a vegetarian or non-vegetarian?** நீங்கள் சைவமா அல்லது அசைவமா?

1. I'm a vegetarian.
   நான் சைவம்.
2. I'm a non-vegetarian.
   நான் அசைவம்.
3. I'm a vegetarian. But, I eat eggs.
   நான் சைவம் தான். ஆனால், முட்டை சாப்பிடுவேன்.
4. I'm a non-vegetarian. But, I eat fish only.
   நான் அசைவம். ஆனால், மீன் மட்டும் சாப்பிடுவேன்.
5. Basically, I'm a vegetarian only. But, occasionally I eat non-vegetarian food.
   நான் அடிப்படையில் சைவம் தான். ஆனால், அவ்வப்போது அசைவ உணவு வகைகளை சாப்பிடுவேன்.
6. Basically, I'm a non-vegetarian. But, nowadays I'm eating vegetarian food only.
   நான் அடிப்படையில் அசைவம் தான். ஆனால், இப்பொழுதெல்லாம் சைவ உணவு வகைகளைத் தான் சாப்பிடுகிறேன்.

(மேற்கூறிய தமிழ் வாக்கியங்கள் எளிதில் புரிந்து கொள்வதற்காகப் பேச்சு நடையில் அமைக்கப்பட்டுள்ளன)

# ADJECTIVE - பெயரடை

**An adjective modifies a noun or a pronoun by describing, identifying, or quantifying words. An adjective usually precedes the noun or the pronoun which it modifies.**

**பெயரடை (adjective) என்பது பெயர்ச்சொல்லை (noun) விளக்கவோ, அடையாளம் கண்டு கொள்ளவோ, அளவைத் தெரியப்படுத்தவோ பயன்படுத்தப்படும். பெயரடை பெயர்ச்சொல்லின் முன் பயன்படுத்தப்படும்.**

**[எ.டு.] Meena is wearing a red skirt.**

**மீனா சிவப்புப் பாவாடை அணிந்துள்ளாள்.**

**இதில் பாவாடை, பெயர்ச்சொல், சிவப்பு - பெயரடை.**

***The highlighted words in the following sentences are all adjectives:***

**1) The heart-shaped balloon floated over the treetops.**

**2) Ajay gave me pink roses.**

**3) He lives in an unfriendly neighbourhood.**

## *A detailed example:* ஒரு விளக்கமான எடுத்துக்காட்டு

**'Bright' - This word can be used as an adjective in various ways and can mean different things.**

**'ப்ரைட்' - இந்த வார்த்தை, பெயரடையாக பல்வேறு வகையில் வெவ்வேறு அர்த்தங்களை உணர்த்துமாறு பயன்படுத்தலாம்.**

| | |
|---|---|
| **John has a bright future.** | **ஜானுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம் இருக்கிறது.** |
| **It is a bright day.** | **இது ஒரு பிரகாசமான நாள்.** |
| **Sandhya is a bright child.** | **சந்தியா ஒரு அறிவாளியான குழந்தை.** |
| **Turn off the light, it is too bright.** | **விளக்கை அணை, மிகவும் வெளிச்சமாக இருக்கிறது.** |

**'Bright' has been used to describe:** **'ப்ரைட்' என்ற வார்த்தை**

- **someone's future.** — **ஒருவரின் எதிர்காலத்தைக் குறிக்கவும்**
- **the weather** — **வானிலையைக் குறிக்கவும்**
- **a child** — **ஒரு குழந்தையைப் பற்றிக் கூறவும்**
- **a light** — **ஒரு விளக்கை/வெளிச்சத்தைப் பற்றி விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டது.**

**So, 'bright' means:** **ஆகையால் 'ப்ரைட்' என்பதற்கு இத்தனை அர்த்தங்கள் உள்ளன:**

- **full of light** — **அதிகமான வெளிச்சம்**
- **clear/sunny** — **பிரகாசம்**
- **clever** — **புத்திசாலித்தனம்**
- **vivid/radiant** — **தெளிவான/நன்கு புலப்படக்கூடிய**

# FORM YOUR OWN SENTENCES

**H.E.L.P.**

கீழேக் காணப்படும் கட்டங்களில் **(Columns)** வார்த்தைகள் தனித்தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் அந்த வார்த்தைகளைக் கோர்வையாகப் **(1+2+3+4...)** படித்து உங்களுக்கு ஏற்றவாறு எத்தனை வாக்கியங்களாக வேண்டுமானாலும் அமைத்துப் படித்துக் கொள்ளலாம். அதற்கான உதாரணங்கள் கீழேக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| This will be<br>This is most probably | the street<br>the right house<br>the exact spot<br>the entrance gate<br>the boundary stone<br>the staff room<br>a private property<br>the best place to look<br>the right drawer<br>the one we want<br>the answer to our problem<br>the safest method<br>the local custom<br>the current fashion here | . |

**Sample:**

1. **This will be the staff room.**
   இதுதான் ஊழியர்களின் அறையாகப் போகிறது.
2. **This is most probably the safest method.**
   அநேகமாக இதுதான் மிகவும் பாதுகாப்பான வழிமுறையாக இருக்கும்.
3. **This will be the best place to look.**
   இதுவே பார்க்கச் சிறந்த இடமாக இருக்கும்.

# TEST YOUR ENGLISH SKILLS

**REWRITE THE SENTENCES IN PASSIVE VOICE.**

1. Priya will buy a new computer.______________________
   *Eg.* A new computer will be bought by Priya.
2. Her boy friend will install it._________________________
3. Millions of people will visit the museum. ________________
4. Our boss will sign the contract. ______________________
5. You will not do it. ________________________________
6. They will not show the new film._____________________
7. He won't see Ramya ______________________________
8. They will not ask him. ____________________________
9. Will the company employ a new worker? ______________
10. Will the plumber repair the shower? __________________

---

2. It will be installed by her boy friend. 3. The museum will be visted by millions of people.
4. The contract will be signed by our boss. 5. It will not be done by you.
6. The new film will not be shown by them. 7. Ramya will not be seen by him.
8. He will not be asked by them. 9. Will a new worker be employed by the company? 10. Will the shower be repaired by the plumber?